**இலங்கை சுங்கத்தின் சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் - 2025**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுங்கத்தின் சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதியத்தின் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பணியகம் செயற்பட்டுள்ளதாக,
- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 02 ஆம் பந்தியின் பிரகாரம் படி அட்டுறு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கொடுப்பனவுக்காக நிதிப் பிரிவுக்கு கிடைத்த வெகுமதிக் கோப்புகளின் அடிப்படையில் மட்டுமே நிதியத்தின் வருமானம் இனங்காணப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்க வேண்டியிருந்த நிலுவை தண்டனைகள் மற்றும் பறிமுதல் தொகையில், அபராதங்கள் மற்றும் பறிமுதல்களின் நிலுவைகளாக வெளித் தரப்பினரிடமிருந்து இலங்கை சுங்கத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,151,811,103 தொகையிலும், இலங்கை சுங்கத்தின் கணக்குப் பிரிவிற்குச் தண்டனைகள் மற்றும் பறிமுதலாக கிடைத்திருந்த போதும் வெகுமதிக் கோப்புகள் தயாரிக்கப்படாத ரூபா 2,064,153,420 தொகையிலும், நிதியத்திற்குரிய தொகையில் 50 சதவீதமான ரூபா 4,607,982,261 தொகை அட்டுறு வருமானமாக நிதிக் கூற்றுக்களில் இனங் காணப்பட்டிருக்கவில்லை. | இதுவரை வசூலிக்கப்படாத அபராதமாக ரூபா 7,628,755,553-ம், வெகுமதிக் கோவைகளில் பெறப்பட்டும் மேலும் வெகுமதிக் கோவைகள் இறுதி செய்யப்படாத அபராதத் தொகையாக ரூபா 2,064,153,420 தொகை அறிக்கை இடப்பட்டிருந்ததுடன் அத்தொகையும் வெளிப்படுத்தல்களாக குறிப்புக்கள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. தனடப்பணமாகப் பெறப்பட்ட பணம் சுங்கத்துறையின் பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படுவதுடன் வெகுமதி நிதியத்திற்குக்குச் சேர வேண்டிய 50% பெறுமதி வெகுமதி கோப்பு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் நிதியத்தில் செலவு வைக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அட்டுறு அடிப்படையில் சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.. |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெகுமதி நிதியத்தின் உப நிதியமொன்றாக பேணி செல்லப்படுகின்ற ஏனைய ஒதுக்கங்கள் மற்றும் போதைப்பொருள் நிவாரண உப நிதியத்தின் மூலம் மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட முறையே ரூபாய் 705,942,036 மற்றும் ரூபா 14,800,000 ஆன செலவினம் வெகுமதி நித்தியத்தின் செலவினமான கருதி நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது | எரிபொருள் போதைப்பொருள் நிவாரணம் 2.5% வீத வெகுமதி மற்றும் ஏனைய ஒதுக்க வெகுமதி நிதியத்தினதும் உப நிதியமாக இருப்பதால் ஒவ்வொரு உப நிதியத்திற்காக வெவ்வேறாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டதால் அந்த உப நிதியிலிருந்து செலவிடப்பட்ட செலவினத்தை வெகுமதி நிதியத்தின் செலவினமாக இருப்பதால் உப நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட அனைத்து செலவினங்களும் சுங்க உத்தியோகத்தர்கள் வெகுமதி நிதியத்தின் செலவினமாக காண்பிக்கப்பட்டுள்ளது. | வெகுமதி நிதியத்தின் செலவினம் சரியாக இனம் காணப்பட்டு நிதி செயலாற்றல் கூற்றில் தெளிவாகவும் சரியாகவும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1869 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2) (ஆ) பிரிவு . | நிதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய முன்மொழிவின் பிரகாரம் நிதியத்திலிருந்து வெகுமதிப் தொகை பகிரப்பட வேண்டிய போதிலும், அத்தகைய அங்கீகாரம் இன்றி, 1988 சனவரி 28 ஆந் திகதிய பிஎல் 118 ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டுள்ளதாக உறுதிப்படுத்தாமல் வெகுமதித் தொகை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 முதல் 2025 ஆம் ஆண்டு வரை யிலான 14 ஆண்டு காலப் பகுதியில் அலுவலர்களுக்கு ரூபா 31,841,796,739 மற்றும் தகவல் அளிப்பவர்களுக்கு ரூபா 5,421,015,509 வெகுமதிப் தொகையாக பகிரப்பட்டிருந்தன. | ஒவ்வொரு ஆண்டும் வெகுமதி நிதியத் திலிருந்து வெகுமதித் தொகையை பகிர்வதற்காக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி அமைச்சரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெறப்பட்டு, பணம் இன்றுவரை பணம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. மேலும், சுங்கத் திணைக்களத்தின் செயலாற்றல் அனைத்துத் துறை அதிகாரிகளின் கூட்டுப் பங்களிப்பைச் சார்ந்து மேற்கொள்ளப்படுவதால் சுங்கப் பிரிவுகளின் அதிகாரிகளை ஊக்குவிக்கவும் அவர்களின் | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட முன் மொழிவு களுக்கு இணங்க வெகுமதி தொகை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அவ்வாறே புலனாய்வு செயற்பாடுகளுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யாத திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ஏனைய 18 பிரிவின் உத்தியோகத்தர் களுக்காக அவ்வாறு ஒதுக்கப்பட்ட வெகுமதித் தொகை ரூபா 647,911,453 ஆக இருந்தது. | செயலாற்றலை மேம்படுத்தவும், சுங்கச் சுற்றி வளைப்பு சோதனைகளில் பங்கேற்கும் அனைத்துப் பிரிவின் உத்தியோகத்தர் களையும் பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் வெகுமதித் தொகையை வழங்க நடவடிக்கைகள்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி செயன்முறை மற்றும் தொடர்புற்ற தரப்பினர்களால் செய்யப்படுகின்ற பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை சுங்கத்தின் 16 பிரிவுகளின் கீழ் விசாரணைகளை நடத்தப்பட்டிருந்த 252 சுங்க விசாரணைகளுக்குரிய சுங்க கட்டளைச்சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட தண்டனைகள் மற்றும் பறிமுதல் பெறுமதிகளாக விதிக்கப்பட்டிருந்த ரூபா 7,151,811,103 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்த நிலுவையில் உள்ள அபராதங்கள் மற்றும் பறிமுதல்களின் பெறுமதியை அறவிடுவதற்கான அவசியமான தொடர் நடவடிக்கைகளில், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்கும் நினைவூட்டல்களை அனுப்புதல், சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை பெற்றுக் கொள்ளல் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடங்கும். E-CCR முறைமையை நவீனமயமாக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. . | நீண்ட காலமாக நிலுவையில் உள்ள இந்த அபராதங்களையும் பறிமுதல்களையும் உடனடியாக வசூலிப்பதற்காக, போதுமான மற்றும் முறையான ஒரு பின்தொடர் செயல்முறையை நடைமுறைப்படுத்தவும், மத்திய சுங்க விசாரணைகளைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படும் கணினி முறைமையின் நிலுவையில் உள்ள அபராதங்கள் மற்றும் பறிமுதல்கள் குறித்த சமீபத்திய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கணனி முறைமையை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயல்முறை தொடர்பான தரப்பினரால் செய்யப்பட்ட பல்வேறு | சுங்க பரிசோதனையின் முடிவில் வசூலிக்கப்பட்ட வருமானத்திலிருந்து முன்னர் | சுங்க கட்டளைச் சட்டத்தின் 166(ஆ)(ஆ) பிரிவு தொடர்பில் |

| | | |
|---|---|---|
| முறைகேடுகள் குறித்து நடத்தப்பட்ட தெரிவு கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் 2022 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் 65 சுங்க ஆய்வுகளின் முடிவில் வரி ஏய்ப்பு செய்யப்பட்ட ரூபா 2,097,525,949 வரி வருமானத்திற்காக அந்த பரிசோதனையின் இறுதியில் நிர்ணியிக்கப்பட்ட ரூபா 46,970,621,345 மொத்த அபராதத் தொகையில் 95 சதவீதத்திற்கும் அதிகமான, அதாவது ரூபா. 44,637,800,387 வரி வருவாய் விலக்கல் செய்யப்பட்டு ரூபா 2,332,820,958 தொகை மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. இந்த அபராதத் தொகை அறவிடப்பட்ட தொகையில் 30 சதவீதம், அதாவது ரூபா. 699,846,287 மட்டுமே திரட்டிய நிதிக்கு செலவு வைக்கப்பட்டதால் (மீதமுள்ள 70 சதவீதம், அதிகாரிகளுக்கு வெகுமதிகள் வழங்குவதற்கான வெகுமதி நிதியத்திறக்கும், சுங்க உத்தியோகத்தர் களுக்கான முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கும் செலவு வைக்கப்படுகிறது), மேலே குறிப்பிட்டபடி ஏய்க்கப்பட்ட ரூபா. 2,097,525,949 வரி வருவாயுடன் ஒப்பிடும் போது, ரூபா. 1,397,679,662 ஆன அரச வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அபராதம் விதிப்பதன் மூலம் அரசாங்கம் பெற்ற வருமானம் ஏய்க்கப்பட்ட வரி வருமானத்தை ஈடுகட்டக் கூட போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்கள் இருந்ததால், சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 166(ஆ)(ஆ) இற்கு கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதப்பட்டது. | ஏய்க்கப்பட்ட வரிகள் மற்றும் கட்டணங்களின் பெறுமதியை அரசாங்கத்தின் திரட்டு நிதியத்தில் செலவு வைக்க வேண்டும் என்று சுங்க கட்டளைச் சட்டமோ அல்லது வேறு எந்தச் சட்டப்பூர்வ உறுப்புரையோ கூறவில்லை என்பதை நான் அவதானிக்கிறேன். அப்பெறுமதியின் மூன்று மடங்கு தொகையை அபராதமாக மாற்ற முடியும் என்றாலும், செய்யப்பட்ட குற்றத்திற்கு ஏற்ற அபராதம் விதிக்கும் விருப்புரிமை அதிகாரம் சுங்க பரிசோதகருக்கு இருப்பது அவசியமான விடயமாகும். இருப்பினும், அத்தவறினை மீண்டும் செய்யாமல் இருப்பதற்கு செய்யப்பட்ட குற்றத்திற்குப் பொருத்தமான அபராதம் விதிப்பதற்காக, 2025.08.27 ஆந் திகதிய 1697 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறிக்கை தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளது. சந்தர்ப்பத்திற்கு இணங்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 166 ஆம் பிரிவின் கவனத்திற்கு உட்படுத்தி 163 ஆம் பிரிவின் கீழ் தண்டனையை இலகுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கவனம் செலுத்தி அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தில் உரய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செயற்பாட்டு வினைதிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுங்க மோசடி அலலது குற்றங்கள் தொடர்பாக சுங்க அதிகாரிகளால் கண்டறியப்பட்ட உண்மைகளின் அடிப்படையிலோ அல்லது தகவல் அளிப்பவர்கள் வழங்கும் தகவல்களின் அடிப்படையிலோ சுங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதுடன் 2015 ஜுலை 01 மற்றும் 2025 திசெம்பர் 31 | புலனாய்வுகள் தீர்க்கப்படுவதற்கு காலதாமதம் ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. ஒரு சுங்கக் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதா / இல்லையா என்பதை உறுதிப்படுத்த ஆவணங்களைக் கண்டறிவதற்கும், | நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சுங்க விசாரணைகளை முன்னுரிமை அடிப்படையில் கண்டறிந்து உடனடியாக முடிப்பதற்கும், |

வரையான காலப்பகுதியில் சுங்கத்தின் பல்வேறு பிரிவுகளால் 42,086 சுங்க விசாரணைகள் பதிவு செய்யப்பட்டன. இருப்பினும், அந்த விசாரணைகளில், 9,307 அல்லது 22 சதவீதம் விசாரணைகள் 2025 திசெம்பர் 31 இற்குள் முடிக்கப்படவில்லை. மேலும், அவ்வாறு தீர்க்கப்படாத அந்த விசாரணைகளில் 4,892 அல்லது 52.5 சதவீதம் விசாரணைகள் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாகவும், 3,207 அல்லது 34 சதவீதம் விசாரணைகள் 01 ஆண்டுக்கு மேற்பட்ட ஆனால் 05 ஆண்டுகளுக்குக் குறைவாகவும் தீர்க்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக சுங்க விசாரணை கோப்புகளை இறுதி செய்வதில் ஏற்படும் தாமதம், அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய வருமானத்தை வசூலிப்பதில் தாமதம், பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் அழிக்கப்படுதல் அல்லது பின்னர் விற்கப்படும்போது அவற்றின் உண்மையான மதிப்பைப் பெற இயலாமை, மற்றும் தகவல் அளிப்பவர்கள் மற்றும் அதிகாரிகளின் ஊக்கமின்மை போன்ற பாதகமான சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

சுங்கத்துறையால் பெறப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்து அதற்கேற்ப உண்மைகளை வெளிப்படுத்துவதற்கும், சந்தேகிக்கப்படும் தரப்பு/நிறுவனத்திற்கு சுங்கத்துறையின் தேவைக்கேற்ப பதிலளிப்பதற்கும், சந்தேகிக்கப்படும் தரப்பு சுங்கத்துறைக்கு பதிலளிக்காத பட்சத்தில் அவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், ஆய்வுகூட மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் போன்றவற்றைப் பெறுவதற்கும், பிற ஒழுங்குமுறை நிறுவனங்களால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கும் மறு ஏற்றுமதி செய்ய உத்தரவிடப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும், அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்தும் செயல்முறைகளை மேற்கொள்வதற்கும், மேன்முறையீடுகளைப் பரிசீலிப்பதற்கும் ஆகும் கால தாமதத்தின் காரணமாக விசாரணைகள் தீர்க்கப்படுவதற்கு காலதாமதம் ஏற்படுகின்றன. சுங்க விசாரணை/ முடிவுக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டால், அந்த முடிவு பெறப்படும் வரை சுங்க விசாரணைக் கோப்பு மூடப்படமாட்டாது. இருப்பினும், சுங்க விசாரணையின் முடிவில், விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு திணைக்கள கட்டளைனயொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

விசாரணைகளை முடிப்பதற்கான ஒரு குறிப்பிட்ட காலஎல்லையும், செயற்திறனான பின்தொடர் வழிமுறையையும் நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 2.3. நிதியத்தின் குறைப்பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுங்க விசாரணைகளுக்குத் தேவைப்படும் எரிபொருள் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கத்தில், வெகுமதி நிதியத்தின் ஒரு உப நிதியமொன்றாக எரிபொருள் நிதியம் நிறுவப்பட்டதுடன். மீளாய்வாண்டில் வெகுமதி நிதியத்திலிருந்து இந்நிதியத்திற்கு ரூபா. 253,489,233 செலவு வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், புலனாய்வு நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட எரிபொருள் செலவு, திணைக்களத்தின் பொதுச் செலவினத் தலைப்பின் கீழ் ஏற்கப்பட்ட காரணத்தால், 2019 முதல் 2025 வரையிலான காலப்பகுதியில் 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா. 554,500 செலவினைத் தவிர, எரிபொருள் நிதியிலிருந்து வேறு எந்தச் செலவும் செய்யப்படவில்லை. அதன்படி, நிதியை நிறுவும் நோக்கத்திற்காக அதன் நிதிகள் போதுமான அளவு பயன்படுத்தப்படாததன், காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிதியத்தின் திரட்டிய மீதி ரூபா. 1,454,447,773 ஆக அதிகரித்திருந்தது. | அவதானிப்புடன் நான் இனங்குக்கிறேன். சுங்கத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக மேலதிக எரிபொருள் தேவைகள் ஏற்பட்டால் அதற்காக பயன்படுத்தவும் LTTE யுத்த நிலைமை காலத்தில், சுங்கத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுங்கத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட கடற்படைப் பிரிவின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதே இந்த நிதியை நிறுவியதன் முதன்மை நோக்கமாக இருந்தபோதிலும், சுங்கத் தடுப்பு நடவடிக்கை களுக்காக மேலதிக எரிபொருள் தேவைகள் ஏற்படாமையால் இந்த நிதியத்தின் மீதி திரண்டுள்ளது. அதன் பிரகாரம், எதிர்காலத்தில் முடிந்தவரை சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | நிதியின் நோக்கங்கள் தொடர்பாக மீண்டும் மீளாய்வொன்று மேற்கொண்டு தற்போதைய தேவைகளின் பிரகாரம் புதிய நோக்கங்களை இனங்கண்டு அதன் பிரகாரம் நிதியங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏதேனும் ஒரு விசாரணையொன்று தொடர்பாக அபராதம் அல்லது விற்பனையாக பணம் எதுவும் பெறப்படாத சந்தர்ப்பங்களில், விசாரணையில் பங்கேற்ற அதிகாரிகளின் அர்ப்பணிப்பையும் சேவையையும் அங்கீகரிக்கும் விதமாக அவர்களுக்கு ஏதேனும் வெகுமதி வழங்குவது அவசியம் என சுங்கப் பணிப்பாளர் நாயகம் கருதினால், அத்தகைய சந்தர்ப்பங்களில் பயன்படுத்து வதற்காக வெகுமதி நிதியத்தின் உப நிதியமொன்றாக நிறுவப்பட்டுள்ள 2.5 சதவீத நிதி, மீளாய்வாண்டின் போது ரூபா. 127,020,846 தொகை செலவு வைக்கப்பட்டிருந்த போதும், அந்த ஆண்டில் நிதியிலிருந்து எந்தச் செலவினமொன்றும் செய்யப்பட வில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் | அவதானிப்புடன் நான் இனங்குகிறேன். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் முடிந்தவரை துல்லியமான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு குறித்து வைத்துள்ளேன். | நிதியத்தின் எதிர்பார்க்கப்படும் தேவைகளைத் துல்லியமாகக் கணித்து, யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரித்த பிறகு, அதன் பிரகாரம் துணை நிதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தின் தேறிய மீதி ரூபா. 614,780,890 வரை அதிகரித்திருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட எரிபொருள் நிதியம் போதைப்பொருள் தடுப்பு நிதியம், 2.5% நிதியம் மற்றும் ஒதுக்கீட்டு நிதியம் மற்றும் உப நிதியங்களில் காணப்படும் திரட்டிய மீதி ரூபா. 2,707,387,539 ஆக இருந்தது. இதில், ரூபா. 1,080,651,409 அல்லது 40 சதவீதம் 5 ஆண்டுகள் வரையிலான காலம் அதாவது 2020 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய காலத்திலிருந்தும் ரூபா. 1,232,644,556 அல்லது 45 சதவீதம், 1 முதல் 5 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்படாமல் இருந்த மீதிகளாக இருந்தன. அதன் பிரகாரம், உப நிதியங்களின் ஒட்டுமொத்த மீதிகளின் காலப் பகுப்பாய்வின் அடிப்படையில், கணிசமான அளவு பணம் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் குவிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. | சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 (2)(ஆ) பிரிவின் பிரகாரம், வெகுமதிப் பணத்தைப் பெறுவதற்காக கோவவைகளைச் சமர்ப்பிக்கும் போது, பரிசுப் பணக் கோவையின் மொத்தத் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் தொடர்புடைய நிதியங்களுக்கு ஒதுக்கப்பட்டு, அந்தத் தொகை இந்த நிதியங்களில் வரவு வைக்கப்பட்டு, தொடர்புடைய கோரிக்கைகளின் அடிப்படையில் பணம் செலுத்தப்படுகிறது. அத்தகைய கோரிக்கை பெறப்படும் வரை அந்த நிதிகளின் மீதி தொகையே குவிந்து காணப்படுகின்றது. | உப நிதியங்களின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை மீளாய்வு செய்வதிலும், நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் மீதமுள்ள நிதிய மீதிகளைத் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கான ஒரு முறையான திட்டத்தை தயாரிப்பதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3. கணக்களி பொறுப்பும் நல்லாலுகையும்**

**3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான எதிர்வுகூறல் மற்றும் வரவு செலவுத் திட்டத் தரவுகளின் அடிப்படையில் அல்லாமல் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதன் காரணமாக, சுங்க உத்தியோகத்தர்கள் வெகுமதி நிதியத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் எரிபொருள் நிதியிலிருந்து மற்றும் 2.5% வெகுமதி நிதியிலிருந்தும் ரூபா. 50,000,0000 மற்றும் ரூபா. 250,000,000 முறையே ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் இந்த நிதியங்களிலிருந்து எந்தச் செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் படி, பாதீட்டு மதிப்பீடுகள் யதார்த்தமான முன்கணிப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. | அவதானிப்புடன் நான் இனங்குகிறேன். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் முடிந்தவரை துல்லியமான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு குறித்து வைத்துள்ளேன். | சரியான மற்றும் யதார்த்தமான எதிர்வுகூறலின் அடிப்படையில் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பாதீட்டு நிதி ஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |